# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 10368 / 2010 / எம்சி. 8 நாள் : 23.10.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 29.10.2010 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம்

## அக்டோபர் 2010

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| | **பொருளடக்கம்** |
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 33- ராஜு சாலையில் கட்டப்பட்ட கட்டிடம் - மின்ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்தல் - உரிமத்தொகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 2 | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - ராதாகிருஷ்ணா ரோடு – புதிய கட்டிடம் - சிற்றுண்டி அறையை மின்ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - 3 இனங்கள் - மின்ஏலம் நடத்தப்பட்டது - ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 4 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - மத்திய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள 5 கடைகள் - உரிமம் பெயர் மாற்றம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 5 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 48 – ரங்கே கவுடர் வீதி – புதிய நவீன மலர் அங்காடி வணிக வளாகம் - மின் ஏலம் மூலம் கடைகள் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 6 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வணிக வளாக கடைகள் - காலியாக உள்ள கடைகள் - உச்சகேள்விதாரர்களுக்கு ஒப்படைத்தல் - ஏலம் கோரப்படாத இனங்களை மறுபொது மின்ஏலம் நடத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - காமராஜபுரம் துப்புரவுப் பணியாளர் காலனி – மாநகராட்சி கட்டிடம் - Y.M.C.A நிறுவனத்திற்கு உரிமக்காலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 42 – உக்கடம் நவீன மீன் விற்பனை வணிக வளாகம் - மின் ஏலம் மூலம் கடைகள் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 9 | நகரமைப்புப் பிரிவு - மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்தல் - அரசு ஆணை வெளியிடப்பட்டது – மாமன்றம் பதிவு செய்தல் - தொடர்பாக. |
| 10 | வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண் 4 - வார்டு எண் 31- கிராஸ்கட் சாலையின் தென்புறத்தில் சத்தி சாலை முதல் பட்டேல் சாலை வரை மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண் 4 - வார்டு எண் 31- கிராஸ்கட் சாலையின் தென்புறத்தில் சத்தி சாலை முதல் பட்டேல் சாலை வரை நடைபாதை அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - நேரு ஸ்டேடியம் - நடைபாதை மற்றும் அலங்கார விளக்குகள் அமைத்தல் - தனியார் பங்களிப்பு மூலம் மேற்கொள்ளுதல் - விருப்ப கேட்பு அறிக்கை கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - வடக்கு மண்டலம் - குப்பைக் கூடைகள் வாங்குதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 14 | பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - தெற்கு மண்டலம் - குப்பைக் கூடைகள் வாங்குதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமனற் அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - கிழக்கு மண்டலம் - குப்பைக் கூடைகள் வாங்குதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - மேற்கு மண்டலம் - குப்பைக் கூடைகள் வாங்குதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 17 | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - 2010 - 2013-ம் ஆண்டு – சத்தி ரோடு நவீன கழிப்பிடம் - கட்டணம் வசூலிக்கும் உரிமம் - மின் ஏலம்" (e-auction) மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 18 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண்.12 - ராமநாதபுரம், நஞ்சுண்டாபுரம் சாலையில் மேம்பாலம் கட்டும் பகுதியில் பாதாள சாக்கடை குழாய் மாற்றி அமைத்தல் - மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| 19 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வ.உ.சி. பூங்காவில் மீன் விற்பனை கூடம் அமைக்க தமிழ்நாடு மீன் விற்பனைக் கழகத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 20 | பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - மாதிரி வார்டுகளை தேர்வு செய்து குப்பை சேகரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 21 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - காந்திபார்க் பேருந்து நிலைய சந்திப்பு - மீன் விற்பனை கூடம் அமைக்க தமிழ்நாடு மீன் விற்பனைக் கழகத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 22 | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - சிங்காநல்லூர் பேருந்து நிலைய வளாகம் - மீன் விற்பனை கூடம் அமைக்க தமிழ்நாடு மீன் விற்பனைக் கழகத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 23 | நகரமைப்புப் பிரிவு - மத்திய சிறைச் சாலையை வெள்ளலூருக்கு மாற்றம் செய்தல் - 75 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு சிறைத்துறைக்கு மாற்றம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

நன்றியுரை

## பொருள் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 33-க்குட்பட்ட ராஜீ சாலையில் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்தை அகற்றி கடை எண் 1ஏ புதியதாக கட்டப்பட்டுள்ளது. இந்த அறையை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப்பணித்துறை வழிகாட்டுதல்படி கடை எண்.1ஏ அறைக்கு மாதம் உரிமம் தொகை ரூ.3,600/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை, சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் அனுமதி பெற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 19.10.10-ம் தேதிய தீர்மான எண்.55-ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ. 25,000/- |
| காப்புத்தொகை | - ரூ. 25,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | -ரூ. 1,50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை | - ரூ. 50,000/ - |

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 10956/2010/அ7(வ)

### மாநகர மன்ற தீர்மானம் எண்.119 நாள் 29.10.2010

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 55 நாள் 19.10.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட ராதாகிருஷ்ணா ரோடு வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் புதியதாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இந்தக்கட்டிடத்தில் சிற்றுண்டி அறை, பயனீர் ஒய்வு அறை மற்றும் மாடிப்படி அறை கட்டப்பட்டுள்ளது இதன் பரப்பளவு 203.15 ச.மீ. சிற்றுண்டி அறை அளவு - 117.19 ச.மீ, ஒய்வு அறை- 57.66 ச.மீ மற்றும் மாடிப்படி அறை - 28.34 ச.மீ.

பொது மக்கள் நலன்கருதி மேற்படி அறைகளில் பயனீர் ஒய்வு அறை மற்றும் மாடிப்படி அறையை மாநகராட்சியில் பராமரிக்கப்படவுள்ளது. சிற்றுண்டி அறையை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப்பணித்துறை வழிகாட்டுதல்படி சிற்றுண்டி அறைக்கு மாதம் உரிமம் தொகை ரூ.28,952/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத்தொகை, வைப்புத் தொகை, சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 19.10.10-ம் தேதிய தீர்மான எண்.56-ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ.1,50,000/- |
| காப்புத்தொகை | - ரூ.1,50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | - ரூ.5,00,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை | - ரூ2,00,000/- |

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 06526/2010/அ7(வ)

### மாநகர மன்ற தீர்மானம் எண்.120 நாள் 29.10.2010

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 56 நாள் 19.10.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு மற்றும் தீர்மான எண்.58
நாள் 19.10.2010

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பொது ஏல குத்தகை இனங்களில் 2 கட்டண கழிப்பிடங்கள், உக்கடம் நவீன ஆடு அறுவைமனை வளாகம் ஆகிய 03 இனங்களுக்கு 22.09.2010 தேதியில் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்குறிப்பிட்டுள்ள மூன்று இனங்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | சென்ற ஆண்டுத் தொகை ரூ. | அரசு மதிப்பு ரூ. | சராசரி ரூபாய் ரூ. | தற்போதைய உயர்ந்தபட்ச தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நவீன கழிப்பிடம் (தளம் 1,2,3 மற்றும் 4) | 16,05,000/- | 15,80,000/- | 15,54,000/- | 13,23,999/- | என்.ரகோத்தமன் |
| 2 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் நவீன கட்டணம் கழிப்பிடம் (பி-3 காவல்நிலையம் அருகில்) | 13,83,000/- | 14,80,000/- | 14,58,667/- | 13,78,250/- | சி.செல்வம் |
| 3 | உக்கடம் புதிய ஆடு அறுவைமனை | 2,13,818/- | 4,00,000/- | 2,06,606/- | 3,25,000/- | என்.கந்தசாமி |

மேற்குறிப்பிட்டுள்ள மூன்று இனங்களுக்கு பெறப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஏல ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பின் போது கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள், மேட்டுபாளையம் மற்றும் ஊட்டி வழியாக செல்லும் பேருந்துகள் தற்பொழுது மேட்டுப்பாளையம் சாலையில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படுவதால் சுமார் 170 பேருந்துகள் மத்திய பேருந்து நிலையத்திற்கு வருவதில்லை எனவும் அதனால் கழிப்பிட கட்டண வசூல் குறைவாகவே ஆகிறது எனவும், காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தினுள் புதிய கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளதால் பி-3 காவல் நிலையம் அருகில் உள்ள கழிப்பிட கட்டண வசூல் சென்ற ஆண்டை விட குறைவாகவே ஆகிறது எனவும் மேலும் கணபதி அருகில் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி ஆடு மற்றும் மாடு அறுவைமனை இவ்வருடம் ரூ.3,00,000 மட்டுமே ஏலம் கோரப்பட்டு ஏலதாருக்கு ஊர்ஜிதம் செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டது எனவும் எனவே மேற்படி ஏலத்தொகையை ஊர்ஜிதம் செய்து ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் பட்டியலில் குறிப்பிட்டுள்ள இரண்டு கட்டண கழிப்பிடங்கள் மற்றும் ஒரு ஆடு அறுவைமனை ஆகியவற்றிற்கு கடந்த மூன்று முறை மின் ஏலம் நடத்தியும் மேற்கண்ட தொகையே உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக பெறப்பட்டுள்ளது. மேற்படி ஏல இனங்களை ஊர்ஜிதம் செய்வது சம்பந்தமாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைத்ததில் அக்குழு தனது தீர்மான எண்.58 நாள் 19.10.10ல் உயர்ந்தபட்ச ஏலத்தொகைகளை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள மூன்று இனங்களுக்கு பெறப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஏல ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்றுக்கொள்வது சம்மந்தமாக மேற்காண் பொருள் குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 5218 /10/அ1

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண்.121 நாள் 29.10.2010</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 58 நாள் 19.10.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பார்வை : 1. அரசு ஆணை எண். 92.ந.நி.ம கு.வ. துறை நாள் 03.07.07.
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.60 நாள். 19.10.2010

--------------------

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள கீழ்குறிப்பட்டுள்ள கடைகளின் தற்போதைய அனுபோகதாரர்கள் மேற்படி கடைகளின் உரிமத்தினை பார்வை 1-ல் கண்ட அரசு ஆணையின்படி தங்களது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தருமாறும் அதற்குண்டான கட்டணங்களை செலுத்தியும் விண்ணப்பங்கள் அளித்துள்ளனர்.

| வ. எண் | கடை எண் | முந்தைய உரிமதாரர் பெயர் | தற்போதைய அனுபோகதாரர் பெயர் | ஒரு வருட கட்டணம் ரூ. | இரசீது எண்.நாள் | பெயர் மாற்ற கட்டணம் ரூ | இரசீது எண். நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 25 | கே.இலட்சுமணன் | தி/ள். ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர் ஓட்டல்ஸ் (பி) லிட்., | 20,640/- | 1566 /18.05.10 | 10,000/- | 1113/ 30.06.10 |
| 2 | 27 | கே.இலட்சுமணன் | தி/ள். ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர் ஓட்டல்ஸ் (பி) லிட்., | 2,880/- | 1577 /18.05.10 | 5,000/- | 1100/ 30.06.10 |
| 3 | 26 | கே.இலட்சுமணன், பங்குதாரர் கே.எஸ்.எம்.ஜி. மீனாம்பாள் & கோ | தி/ள். ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர் ஓட்டல்ஸ் (பி) லிட்., | 3312/- | 1571/ 18.05.10 | 5,000/- | 1092/ 30.06.10 |
| 4 | 20 | கே.இலட்சுமணன் | தி/ள். ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர் ஓட்டல்ஸ் (பி) லிட்., | 51,168/- | 1550/ 18.05.10 | 10,000/- | 1060/ 30.06.10 |
| 5 | 21 | கே.இலட்சுமணன், பங்குதாரர் கே.எஸ்.எம்.ஜி. மீனாம்பாள் & கோ | தி/ள். ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர் ஓட்டல்ஸ் (பி) லிட்., | 40,800/- | 1560/ 18.05.10 | 10,000/- | 1044/ 30.06.10 |

மேற்குறிப்பிட்டுள்ள விவரப்படி பெயர்மாற்றம் செய்வதற்கான தொகையினை அரசாணையில் தெரிவித்துள்ளபடி தொகை செலுத்தியுள்ள மனுதாரர்களுக்கு மேற்படி கடைகளின் உரிமையினை பெயர்மாற்றம் செய்வதற்கு பார்வை 2-ல் கண்ட வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.60 நாள் 19.10.2010 –ல் ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே மேற்காண் பொருள் குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 5218 /10/அ1

### மாநகர மன்ற தீர்மானம் எண்.122 நாள் 29.10.2010

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 60 நாள் 19.10.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - வார்டு எண்.48 ரங்கே கவுடர் வீதியில் புதிதாக கட்டப்பட்ட நவீன மலர் அங்காடி வணிக வளாகம் கட்டப்பட்டு குத்தகைதாரர்களுக்கு ஒப்படை செய்ய வேண்டியது தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 48, ரங்கே கவுடர் வீதியில் நவீன மலர் அங்காடி வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி வளாகத்தில் கீழ்க்கண்ட வரியினங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

| இனங்கள் | கடையின் அளவுகள் | மொத்த கடைகள் | சதுர அடிகள் |
|---|---|---|---|
| வியாபார கடைகள் | 10'.0" x 8'.3" | 18 | 83 |
| வியாபார கடைகள் | 8'.6" x 8'.3" | 4 | 70 |
| வியாபார கடைகள் | 10'.0" x 12'.6" | 2 | 126 |
| வியாபார கடைகள் | 10'.0" x 10'.0" | 1 | 100 |
| வியாபார கடைகள் | 13'.0" x 10'.0" | 2 | 130 |
| மொத்த வியாபார கடைகள் | 16'.0" x 10'.0" | 18 | 160 |
| மொத்த கடைகள் | | 45 | |
| குளீரூட்டும் அறை | 39'.0" x 24'.0" | 1 அறை | 936 |

<u>கட்டண கழிப்பிடங்கள்</u>

பெண்கள் கழிப்பிடம் - 3 கழிப்பிடங்கள் மற்றும் 2 கை கழுவும் பாத்திரங்கள்

ஆண்கள் கழிப்பிடம் - 3 சிறுநீர் கழிப்பிடங்கள் , 3 கழிப்பிடங்கள் மற்றும் 2 கை கழுவும் பாத்திரங்கள்

<u>இருசக்கர வாகனம் நிறுத்துமிடம்</u> - 166 வாகனங்கள் நிறுத்தலாம்

அளவு - 9'.0" x 102'.0" = 918 sq.ft. * 2 sides
9'.0" x 108'.0" = 972 sq.ft. * 2 sides

மொத்த வியாபார கடைகள் 45, குளிரூட்டும் அறை, வாகனம் நிறுத்துமிடம் மற்றும் கழிப்பிடம் முதலிய அனைத்து வசதிகளும் கட்டமைப்பில் உள்ளது. மேற்படி அனைத்து இனங்களையும் தனித்தனியாக ஒதுக்கீடு செய்யவும் தற்போதைய நடைமுறையினை தவிர்த்த ஒரே குத்தகை இனமாக ஒரே நபர் வசம் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.14, நாள்.17.05.2010 -ல் பரிந்துரைக்கப்பட்டு மாநகர மன்ற தீர்மான எண்.46, நாள் 21.05.2010-ன்படி தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் கட்டமைப்பிலுள்ள அனைத்து இனங்களையும் (கடைகள், குளிரூட்டும் அறை, கட்டண கழிப்பிடம், மற்றும் வாகனம் நிறுத்துமிடம் முதலியன) ஒரு நிறுவனம்/ஒரு நபருக்கே குத்தகை மூலம் ஒதுக்கீடு செய்து அவரே கட்டமைப்பிலுள்ள இனங்களை உள் ஒதுக்கீடு செய்து கொள்ளலாம் என்ற நிபந்தனையின் பேரில் மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விடுவது குறித்து ஆலோசனை கோரப்பட்டது. இம்முறையில் உள்ள சாதக, பாதகங்கள் குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது. அரசின் உத்திரவு பெறப்பட்டபின்பு இம்முறையில் வணிக வளாகங்களை ஒப்படை செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே, ரங்கேகவுடர் வீதி வணிக வளாகத்தில் உள்ள 45 கடைகளையும் தனித்தனியாக பொது மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்யவும், இக்கட்டமைப்பிலுள்ள கட்டணக்கழிப்பிடம் மற்றும் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றை வருடாந்திர குத்தகை இனப்பட்டியலில் ஒரே இனமாக சேர்த்து மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தவும் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் காப்புத் தொகை, வைப்புத் தொகை, வங்கி உறுதி சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழுக்குப் பதிலாக செலுத்தவேண்டிய தொகையினை நிர்ணயம் செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம்.

ந.க.எண். 9451/09/அ1 (மே)

---

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.123 நாள் 29.10.2010</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 6

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - வணிகவளாக கடைகள் - காலியாக உள்ள மாநகராட்சி கடைகளுக்கு மறு பொது மின் ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. உச்சக் கேள்வி தாரர்களுக்கு கடைகள் ஒப்படைத்தல் மற்றும் ஏலம் கோரப்படாத இனங்களை மறு பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி - கோருதல் - தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலதிற்கு உட்பட்ட காலியாக உள்ள வணிக வளாக கடைகளுக்கான மறு பொது மின்ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளி 03.09.10 அன்று மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நடைபெற்றது. அதில்;

அ. கிருஷ்ணசாமி ரோடு (வடக்கு)

| வ. எண் | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர உரிம மதிப்பு ரூ. | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி தொடர்பாக | | உயர்த்தப் பட்ட ஏலம் ஒப்பந்த புள்ளி ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | 6 | எம். மகுடபதி | 2500 | 2650 | ---- | 2650 |
| 2 | 6 | ஏ.எம். நாசர் அலி | 2500 | 2600 | ---- | ---- |
| 3 | 7 | எம். மகுடபதி | 2500 | 2700 | ---- | 2700 |
| 4 | 7 | ஏ.எம். நாசர் அலி | 2500 | 2625 | ---- | ---- |

மேற்படி கிருஷ்ணசாமி ரோடு (வடக்கு) கடை எண். 6, 7 -க்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பைக் காட்டிலும் மின் ஏலத்தின் கோரப்பட்டுள்ள உயர்நதபட்ச மின் ஏலக் கேள்விதாரரான கடை எண். 6, 7 ஐ திரு.மகுடபதி என்பவருக்கு மறு பொது ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்படைப்பு செய்யவும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு ஒதுக்கீடு செய்யலாம்.

ஆ.பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடை கடைகள்

| வ. எண் . | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பு ரூ. | தினசரி வாடகை உச்ச கேள்வி தொகை | | உயர்த்தப் பட்ட ஏலம் ஒப்பந்த புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 1 | A7 | எம். காஜாமைதீன் | 250 | ---- | 110 | 110 |
| 2 | A7 | எஸ்.ஷாஜகான் | 250 | ---- | 50 | ---- |
| 3 | A8 | கே.கண்ணன் | 250 | ---- | 110 | 110 |
| 4 | A8 | வி.எஸ்.அப்பாஸ் | 250 | ---- | 70 | ---- |
| 5 | E56 | எஸ்.மைதீன்பாஷா | 250 | ---- | 120 | 120 |
| 6 | E56 | ஆர்.சிட்டிபாபு | 250 | ---- | 50 | --- |

மேற்படி கடை எண்கள் A7, A8, E56 -க்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைக் காட்டிலும் குறைவாக கோரப்பட்டிருந்ததாலும் 05.11.09-ல் நடைபெற்ற ஏலத்தில் கடை எண் A7 க்கு ஒப்பந்த புள்ளி தொகை ரூ.500-ம், கடை எண். A8-க்கு ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.475-ம் மற்றும் 15.02.10-ல் நடைபெற்ற மறு ஏலத்தில் கடை எண். E56 க்கு ரூ.720-ம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர்கள், ஒரு வருட வாடகைத் தொகை செலுத்தாத காரணத்தால், அவர்களுடைய வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்யப்பட்டது. மேற்படி கடைகளுக்கு மறு ஏலம் 09.08.2010-ல் நடைபெற்றதில் ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டார். மின் ஏலக் கோரிக்கை ஏதும் கோரவில்லை. இந்நிலையில் மேற்கண்டவாறு 03.09.2010-ம் தேதிய மறு ஏலத்தில் ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி கடை எண்கள் A7, A8, E56 -க்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பைவிட குறைவான ஏலக்கேள்வித் தொகை பெற்றிருந்தாலும், மேற்படி இடத்திற்கு பெறப்பட்ட அரசு வழிகாட்டி மதிப்பு ஒரு சதுர அடிக்கு ரூ.23.70 என உதவி பொறியாளர், தனது 15.05.2010-ம் தேதி குறிப்பில் தெரிவித்துள்ளார்கள். அதன்படி கடை எண். A7, A8, E56 ஆகிய கடைகளின் அளவு 5 x 4 = 20 சதுர அடிகள். அதன் அடிப்படையில் 20 சதுர அடிகள் x ரூ. 23.70= ரூ.474/- ஆகும்.

கடை ஏலதாரா்கள் A7, A8 ஆகிய கடைகள் ஒரு நாள் வாடகையாக ரூ.110/-க்கு ஏலம் கோரியுள்ளனா். (அதன்படி மாத வாடகை ரூ.3300/-), E 56 ஒரு நாள் வாடகை ரூ.120/-, ஆக மாதத்திற்கு ரூ.120 வீதம் x 30 நாட்களுக்கு = ரூ.3600/- என ஏலம் கோரியுள்ளனா். எனவே, வருவாய் இழப்பை தவிா்க்கும் பொருட்டு, மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட நபருக்கு கடை ஒதுக்கீடு செய்யலாம்.

இ. மறு ஏலம் / ஒப்பந்த புள்ளியில் ஏலம் கோரப்படாத கடைகள் விபரம்:-

| | | காலியாக உள்ள மொத்த கடைகள் |
|---|---|---|
| அ. பன்னீா் செல்வம் பூ மாா்க்கெட் மேடை கடைகள் | F63, F67, F68, F70, F72, G85, G86, G87, H93, H94 H98 | 11 |
| ஆ. கிருஷ்ணசாமி ரோடு (வடக்கு) | கடை எண். 4 | 1 |
| இ. சுப்ரி வீதி புதிய கடைகள் | கடை எண். 4 A | 1 |
| மொத்த கடைகள் | | 13 |

எனவே, மேற்படி உயா்ந்தபட்ச ஏல கேள்வித் தொகை பெற்ற சம்பந்தப்பட்ட ஏலதாரா்களுக்கு கடை ஒதுக்கீடு வழங்கவும், ஏலத்தில் கோரப்படாத மேற்படி 13-கடைகளுக்கு மீண்டும் மறு பொதுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நடத்தவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண். 57, நாள்.19.10.2010 ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே, மேற்படி பொருள் தொடா்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம்.

அ. ஏற்கலாம்

ஆ. வருவாய் இழப்பை தவிா்க்க A7, A8, E56 கடைகளுக்கு உச்ச கேள்வி தொகையினை ஏற்கலாம்.

இ. ஏற்கலாம்.

ந.க.எண்.5024/06/அ1 (மே)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 124 நாள் 29.10.2010**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண் 57 நாள் 19.10.2010 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு 'அ' 'ஆ', ' இ' அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள் - அனுமதி - வாா்டு எண்.35 - காமராஜபுரம் துப்புரவுப்பணியாளா்கள் காலனி ஒரு அறை Y.W.C.A. நிறுவனம் - 01.04.2010 - முதல் 31.03.2013 முடிய பயன்படுத்த அனுமதி நீடித்து வழங்குவது - சம்பந்தமாக.

---

கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் காமராஜபுரம் துப்புரவுப் பணியாளா் காலனியில் உள்ள மாநகராட்சி கட்டிடத்தின் ஒரு அறையை Y.W.C.A நிறுவனத்தாா் பொதுமக்கள் சமூக நலனுக்காக பயன்படுத்த மாத வாடகை ரூ.697/- என்ற அடிப்படையில் ஏப்ரல் மாதம் 2007 முதல் மாா்ச் 2010 முடிய 3 ஆண்டுகளுக்கு மாமன்ற தீா்மான எண். 63 நாள். 23.07.2007-ன்படி அனுமதித்து உரிமம் வழங்கப்பட்டது. இதன் உரிம காலம் 31.03.2010 ஆம் தேதியுடன் முடிவடைந்துள்ளது.

Y.W.C.A-யின் பொது மேலாளா் இக்கட்டிடத்தை சமூதாயத்தில் மிகவும் பின்தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக மேலும் 3 ஆண்டுகளுக்கு பயன்படுத்திக்கொள்ள அனுமதி கேட்டு 20.04.2010-ல் விண்ணப்பித்துள்ளாா்.

அரசாணை எண். (இருபதாண்டுகள்) 147 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்குதுறை நாள் 30.12.2000 –ன்படி 3 ஆண்டுகள் உரிமக்காலம் முடிந்த இனங்களுக்கு மறுஏலம் விடுவதை தவிா்த்து, ஏற்கெனவே இருந்த வாடகையில் குறைந்த பட்சமாக 15% கூடுதலாக வாடகை இருக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது..

எனவே, மேலே குறிப்பிட்டுள்ள கட்டிடத்தை Y.W.C.A. அமைப்புக்கு 1.4.2010 முதல் 3 ஆண்டுகள் உரிமத்தை நீடிக்கவும் அதற்கான மாத வாடகையை அரசாணையின்படி 15% உயா்வு செய்து நிா்ணயிக்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.53, நாள்.19.10.2010 ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே, மேற்படி பொருள் தொடா்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 1405/2007/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண்.125 நாள் 29.10.2010**

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 53 நாள் 19.10.10 ஐ ஏற்று மாநகராட்சிக்கு தேவையானபோது ஒருமாத கால அவகாச அறிவிப்பின்பேரில் உடனடியாக ஒப்படை செய்யவேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண் 8**

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - வார்டு எண்.42 – உக்கடம் பைபாஸ் ரோட்டில் புதிதாக கட்டப்பட்ட நவீன மீன் விற்பனை வணிக வளாகம் கட்டப்பட்டு குத்தகைதாரர்களுக்கு ஒப்படை செய்ய வேண்டியது தொடர்பாக.**

*****

**கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்.42 நவீன மீன் விற்பனை வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி வளாகத்தில் கீழ்கண்ட வரியினங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

**மீன் விற்பனை கடைகளின் எண்ணிக்கை - 68 கடைகள்**

**கட்டண கழிப்பிடங்கள்**

**பெண்கள் கழிப்பிடம் - 3 கழிப்பிடங்கள்**
**ஆண்கள் கழிப்பிடம் - 6 சிறுநீர் கழிப்பிடங்கள், 3 கழிப்பிடங்கள்**
**இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் - 50 வாகனங்கள் நிறுத்தலாம்**
**நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் - 4 வாகனங்கள் நிறுத்தலாம்**

**மொத்த வியாபார கடைகள் 68, வாகனம் நிறுத்துமிடம் மற்றும் கழிப்பிடம் முதலிய அனைத்து வசதிகளும் கட்டமைப்பில் உள்ளது. மேற்படி அனைத்து இனங்களையும் தனித்தனியாக ஒதுக்கீடு செய்யும் தற்போதைய நடைமுறையினை தவிர்த்த ஒரே குத்தகை இனமாக ஒரே நபர் வசம் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.15, நாள்.17.05.2010ல் பரிந்துரைக்கப்பட்டு மாநகர மன்ற தீர்மான எண்.44 நாள்.21.05.2010-ன்படி தீர்மானிக்கப்பட்டது.**

**இந்நிலையில் கட்டமைப்பிலுள்ள அனைத்து இனங்களையும் (கடைகள், கட்டண கழிப்பிடம், மற்றும் வாகனம் நிறுத்துமிடம் முதலியன) ஒரு நிறுவனம், ஒரு நபருக்கே குத்தகை மூலம் ஒதுக்கீடு செய்து அவரே கட்டமைப்பிலுள்ள இனங்களை உள் ஒதுக்கீடு செய்து கொள்ளலாம் என்ற நிபந்தனையின் பேரில் மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விடுவது குறித்து அரசிடம் ஆலோசனை கோரப்பட்டது.**

**மாநில அளவில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தும் விதமாக பொதுவான ஏல முறையினை செயல்படுத்திட பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு வருவதனால் அரசின் உத்தரவு பெறப்பட்டவுடன் புதிய நடைமுறையினை செயல்படுத்தும் வரை நடைமுறையில் உள்ளவாறு கடைகள் மற்றும் இதர இனங்களை தனித்தனியாக ஒதுக்கீடு செய்யவும் அறிவுறுத்தப்பட்டது.**

**எனவே, உக்கடம் புதிய மீன் விற்பனை வணிக வளாகத்தில் உள்ள 68 கடைகளையும் தனித்தனியாக பொது மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்யவும், இக்கட்டமைப்பிலுள்ள கட்டணக்கழிப்படம் மற்றும் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றை வருடாந்திர குத்தகை இனப்பட்டியலில் ஒரே இனமாக சேர்த்து, கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு மின் ஏலம் நடத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.**

| | | | ஒவ்வொரு கடைக்கும் | | | |
|---|---|---|---|---|---|---|
| வ.எண். | இனங்கள் | மொத்த கடைகள் | காப்பு தொகை ரூ. | வைப்பு தொகை ரூ. | சால்வென்சி மதிப்பு தொகை ரூ. | சால்வென்சி இல்லாதோர் செலுத்த வேண்டிய தொகை ரூ. |
| 1. | மீன் வியாபார கடைகள் | 68 | 25,000 | 25,000 | 1,00,000 | 50,000 |
| 2. | வருடாந்திர குத்தகை இனம் கழிப்பிடம் மற்றும் இரண்டு, நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் | - | 25,000 | 25,000 | 1,00,000 | 50,000 |

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்** **ந.க.எண். 4006 / 2010 /அ1/ தெ**

**மாநகர மன்ற தீர்மானம் எண்.126 நாள் 29.10.2010**

**பொருளில் வார்டு எண் 41 என திருத்தம் செய்து பதிவு செய்யப்பட்டது. அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் 9**

**பொருள். கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் எல்லை விரிவாக்கம் குறித்த அரசாணை (நிலை )எண். 219. நாள். 28.09.2010.குறித்து.**

**கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்து, கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் நகராட்சி பகுதிகளான 1. குறிச்சி, 2.குனியமுத்தூர், 3. கவுண்டம்பாளைம் ஆகியவற்றையும் மற்றும், பேரூராட்சி பகுதிகளான 4. சரவணம்பட்டி, 5. காளப்பட்டி, 6. வெள்ளலூர், 7. வடவள்ளி, 8. துடியலூர், 9. வீரகேரளம், 10. பேரூர் ஆகியவற்றுடன் மேலும் ஊராட்சி அமைப்புகளான 11. சின்னியம்பாளையம், 12. விளாங்குறிச்சி ஆகிய 12 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லையினை விரிவாக்கம் செய்து அரசாணை (நிலை) எண்.219, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் தோ்தல் துறை, நாள். 28.09.2010-ன் மூலம் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.**

**மேற்குறித்த அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமா்ப்பிக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 11533/2007/எம்.எச்.5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.127 நாள் 29.10.2010</u>**

**அரசாணை (நிலை) எண். 219 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.09.2010 பதிவு செய்யப்பட்டது.**

---

**பொருள் எண் 10**

**கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண் 4, வார்டு எண் 31-ல் உள்ள கிராஸ்கட் சாலையின் தென்புறத்தில் சத்தி சாலை முதல் பட்டேல் சாலை வரை மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ. 65,65,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.**

**மேற்படி இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 11528/2010/டி1 (வ)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.128 நாள் 29.10.2010</u>**

**பொருளில் நஞ்சப்பா சாலை முதல் பட்டேல் சாலைவரை என பதிவு செய்யப்பட்டது. அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண் 11**

**கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண் 4, வார்டு எண் 31-ல் உள்ள கிராஸ்கட் சாலையின் தென்புறத்தில் சத்தி சாலை முதல் பட்டேல் சாலை வரை நடைபாதை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 59,72,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.**

**மேற்படி இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 11529/2010/டி1 (வ)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.129 நாள் 29.10.2010</u>**

**பொருளில் நஞ்சப்பா சாலை முதல் பட்டேல் சாலைவரை என பதிவு செய்யப்பட்டது. அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண் 12**

**கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் நேரு ஸ்டேடியம் சுற்றிலும் புதியதாக நடைபாதை அமைத்து அலங்கார விளக்குகள் நிறுவி மூன்று வருட காலத்திற்கு பராமரித்தல் பணி, தனியார் பங்களிப்பு மூலம் விளம்பரம் செய்யும் உரிமையுடன் மேற்கொள்ளவும், மேற்படி காலநீட்டிப்பு தேவைப்பட்டால் மாமன்றத்தின் அனுமதி பெற்று நீட்டிப்பு செய்யவும், விருப்ப கேட்பு அறிக்கை கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 11070/2010/MD 4**

